மலர் 1 இதழ் 4 ஏப்ரல், 2017 ISSN : 2454-3993

# தமிழ்மறையும் தமிழ் மந்திரமும் வெளிப்படுத்தும் சமுதாயச் சிந்தனையும்

**முனைவர் க.கலாவதி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்

மனித சமுதாயத்திற்கு ஏதேனும் ஒரு வகையில் பயன்படும் முறையில் வாழ்க்கையின் உண்மையோடு இணைந்ததாக இயற்றப்பட்டுக் காலம் கடந்து வாழும் விழுமியநூலே இலக்கியமாகும். உயர்ந்த நோக்கத்தையும், விழுமிய எண்ணத்தையும் கொண்டனவாக தமிழ்மறை என்றழைக்கப்படும் திருக்குறளும் தமிழ்மந்திரம் என்று போற்றப்படும் திருமந்திரமும் அமைந்துள்ளன.

வடமொழியில் வேதம் பொதுநூல். சிவாகமம் சிறப்புநூல். அதுபோலத் தமிழில் திருக்குறள் பொதுநூலாகவும் திருமந்திரம் சிறப்பு நூலாகவும் கொள்ளலாம். திருக்குறள் அறம், பொருள், இன்பம் ஆகியவற்றையும் திருமந்திரம் சியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவற்றையும் விரித்துரைக்கின்றன. திருக்குறள் மூன்று இயல்களாகப் பகுக்கப்பட்டும், திருமந்திரம் ஒன்பது தந்திரங்களாகப் பகுக்கப்பட்டும் அறக்கருத்துக்கள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

## அறம்

மனிதன் தனக்கென வரையறுத்துக்கொண்ட ஒழுக்கநெறி, முறைகள் இவற்றின் தொகுதியே அறம்

எனலாம். மனிதன் சிறப்பாகவும், வளமாகவும் வாழ்வதற்கும் அதன்வழி இன்பம் பெறுவதற்கும் நல்ல செயல்களைக் கடைப்பிடித்து வாழ்க்கையில் உயர்வதற்கும் அல்லாதவற்றை ஒதுக்கி மேற்கொள்ளப்படும் செயல்களே அறம் எனப்படும்.

பிறர்க்கு மனதாலும் துன்பம் நினையாது அறவழியில் செல்பவனையே உலகம் போற்றும். பொறாமை கொள்ளுதல், பிறர் பொருளின்மீது ஆசைவைத்தல், கடுமையான சொற்களைப் பேசுதல் இவற்றைத் தவிர்த்து வாழ்வதுதான் அறமாகும்.

மொய்ம்மை பொறையுடைமை மேன்மை தவம்அடக்கம்
செம்மை ஒன்றின்மை துறவுடைமை - நன்மை
திறம்பா விரதம் தரித்தலோடு இன்ன
அறம்பத்தும் ஆன்ற குணம் (அறநெறிச்சாரம்)

மனிதன் மேற்கொள்ள வேண்டிய அறங்களை இப்பாடல் குறிப்பிடுகின்றது. அறம் மறுமைக்குத் துணையாகும் என்பதனை ஈட்டிய பொருளும் வீட்டிலே நின்றுவிடும். ஊறவினர் சுடுகாட்டில் இடும் நெருப்பால் உடல் அழியும். ஆனால் அறம் ஒன்றே நிலைத்து நிற்கும் என்று முனைப்பாடியார் எடுத்துரைக்கின்றார்.

மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்துகின்ற வாழ்வியல் ஒழுக்கங்களை உடையதே அறமாகும். இவ்வொழுக்கங்கள் மனிதனை நெறிப்படுத்துவன. சிந்திக்கத் தூண்டுவன. நல்வழிப்படுத்துவன. இத்தகைய அறங்களை அறிவுரைகளாகப் பாடியுள்ளனர் சித்தர்கள்.

சத்தியமே வேணுமடா மனித னானால்
சண்டாளஞ் செய்யாதே தவறிடாதே
நித்திய கர்மம் விடாதே நேமம் விட்டு
நிட்டையுடன் சமாதிவிட்டு நிலை சேராதே
புத்திக்கெட்டுத் திரியாதே பொய் சொல்லாதே
புண்ணியத்தை மறவாதே பூசல் கொண்டு
கத்தியதோர் கள்ளிட்டுத் தாக்கி யாரே
கர்மி யென்று நடவாதே

எனச் சேக்கிழார் பெரியபுராணத்தில் தனிமனிதர்கள் ஏற்றுப் பின்பற்றத்தக்க அறம் சார்ந்த ஒழுக்கப் பண்பாட்டு நிலைகளை வலியுறுத்துகின்றார்.

ஏறிபத்தநாயனார் பட்டத்து யானையைக் கொன்றபோது யானையையும் பிறவற்றையும் ஒழுங்கு நிலையில் வைத்துக் கொள்ளாதது தன்னுடைய தவறே என்றும் அதற்குப் பொறுப்பு தானே என்றும் கருதித் தன் உடைவாளைக் கொடுத்து தன்னை வெட்டுமாறு கூறிய அறம் அரசியல் அறமாகும். இத்தகைய அறங்களை திருக்குறளும் திருமந்திரமும் நேரிடையாகவும் மறை பொருளாகவும் எடுத்துரைக்கின்றன.

சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு (குறள் - 31)

அறம் சிறப்பையும், செல்வத்தையும் அளிக்கவல்லது ஆகையால் உயிர்க்கு அத்தகைய அறத்தைவிட நன்மையானது வேறில்லை என்று குறள் குறிப்பிடுகின்றது. அறம் என்பது பிறர்க்கு ஏதேனும் ஒன்றைக் கொடுத்து உதவுவது என்றால் அதனை எல்லோராலும் செய்ய இயலாது. ஆதனால்தான் வள்ளுவர் நம்மோடு பழகுகின்றவர்கள், உறவினரோடு இனிமையாகப் பார்த்து இதயம் கலந்த இன்சொல்லைப் பேசினாலே அதுவே அறம் என்று குறிப்பிடுகின்றது. இதனைத்தான் இதற்கு விளக்கம் தருவது போல,

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம் பிறர்க்கு இன்னுரைதானே

இத்திருமந்திரப் பாடல் அமைந்துள்ளது.

யாக்கை நிலையாமை, இளமை, உயிர், செல்வம் இவை அனைத்தும் நிலையற்றது என்பதை மக்கள் உணர்ந்து அறம் செய்து வாழவேண்டும் என அறநூல்கள் வலியுறுத்துகின்றன. அறச்செயல்களை நாளை மேற்கொள்ளலாம் என்று எண்ணுவதற்கு,

இன்று அருணோதயம் கண்டோம் உயர்ககன
முகட்டின்மிசை இந்தப்பானு
சென்றுஅடைய நாம்காண்பது ஐயம் அதைக்
காண்கினும் மேல் திசையிலிருக்கும்
குன்றடையும் அளவும்நாம் உயிர்வாழ்வது
அரிது அதன்முன் குறுகும் கூற்றம்
என்றுஅச்சத்துடன் மனமே மறவாமல்
அறவழியில் ஏகு வாயயெ (விவேகசிந்தாமணி)

இப்பாடல் விளக்கம் தருகின்றது. இப்பாடலைப் படிக்கும் ஒவ்வொருக்கும் இன்றே அறம் செய்ய வேண்டும் என்ற ஆவல் பிறக்கும்.

நாள்தோறும் வாழ்நாட்கள் ஒவ்வொரு நாளாகக் கழிந்து போதலின் அந்நாட்களைத் துய்த்து இன்புற்றுக் கொண்டிராமல் இன்றே அறஞ்செய்து வாழவேண்டும்.

பண்டம் பெய் கூரை பழகி விழுந்தகால்
உண்ட அப்பெண்டிரும் மக்களும் பின்செல்லார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழி நடவாதே (திருமந்திரம் - 144)

என்ற திருமந்திரப் பாடல் யாக்கை நிலையாமையை எடுத்துரைத்து அறம் செய்ய வழிகோலுகிறது.

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு (குறள் - 329)

என்ற குறள் உயிர்நிலையாமையை எடுத்துரைத்து அறம் செய்ய வழிகாட்டுகிறது.

ஊர்எலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணம்என்று பேர்இட்டு
சூரை ஆங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கு நினைப்பு ஒழிந்தார்களே (திருமந் - 145)

கூத்தாட்டு அவைக்குழாந் தற்றே பொருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று (குறள் - 332)

கூத்தாடுமிடத்தில் கூட்டம் சேர்வதைப் போன்று பெரிய செல்வம் வந்து சேரும் கூத்து முடிந்ததும் கூட்டம் கலைந்து செல்வதைப் போன்று செல்வமும் நீங்கிப்போகும் என்னும் செல்வம் நிலையாமையை எடுத்துரைக்கின்றது. இக்குறள்,

மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லும் கலம்போல்

என்று செல்வம், நிலையற்ற செல்வம் நீரில் கவிழ்கின்ற படகினைப் போன்றது என்று திருமூலரும் குறிப்பிட்டுள்ளார்.

நிலையற்ற உலகில் நிலைத்தப் புகழைப்பெற அறம் செய்து வாழவேண்டும் என இருநூல்களும் வலியுறுத்துகின்றன.

**அன்புடைமை**

அன்பின் பினைப்பால்தான் ஆக்கங்கள் தோன்றும். உலகினை வாழ்விக்கும் அன்புக்கோர் உருவமில்லை. ஆனால் உலகத்தில் அன்புதனை உணராத உயிரொன்றும் இல்லை. அன்பென்ற மந்திரக்கோலின் அசைவால்தான் இன்பம் வந்தெய்கிறது. அன்பெனும் மரம் விழியளக்கமுடியாத விதத்தினிலே கிளைபரப்பி, துன்பமெனும் வெயிலிலே துவண்டு வரும் நெஞ்சுக்கு கருணை நிழல் உதவிக் காப்பற்றும் இனிய மரம்.

இராமலிங்க அடிகள் இறைவனிடம், அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிய வேண்டும் ஆருயிர்கட் கொல்லாம் நான் அன்புசெயல் வேண்டும் என்று அன்பு ஒன்றையே வேண்டுகிறார்.

உண்மை அன்பர்க்கு உயிரையும் தரலாம்
உண்மை அன்பால் உலகையும் வெல்லலாம்
அன்பை வளராய் அன்புஉனை வளர்க்கும்
அன்பே கடவுள் அன்பே இன்பம்
உண்மை அன்பன் உலகினும் அரிதாம்
உண்மை அன்பு உலகினும் பெரிதாம் (இன்பமாலை - 63)

என்று அன்பின் தன்மையை யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

அன்பிலிருந்துதான் ஆர்வம் பிறக்கின்றது. ஆர்வத்திலிருந்துதான் நட்பு உண்டாகின்றது. அன்பிலிருந்தே அருளும் தோன்றுகிறது. அன்புதான் வாழ்க்கையின் ஆதாரம் என்பதை மனதில் கொண்டு உயிர்களிடத்து அன்பு செலுத்தவேண்டும்.

அன்பின் வழியது உயர்நிலை அ∴திலார்க்கு
என்புதோல் போத்த உடம்பு (குறள் - 80)

என்று திருக்குறளும்,

என்பிற் கொளுவி இசைந்தது தோற்றசை
முன்பிற் கொளுவி முடிகுவதாமே

என்று திருமந்திரமும் அன்பின் சிறப்பினை எடுத்துரைக்கின்றன. அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர்நின்ற உடம்பாகும் என்று குறளும், அன்பு செலுத்தும் அளவுக்கு இறைவன் அருள்செய்வான் என்று திருமந்திரமும் குறிப்பிடுகின்றன.

**நடுவுநிலைமை**

மேதினியில் மேன்மை பெற மனிதன் மேற்கொள்ள வேண்டிய நற்பண்புகளுள் ஒன்றுதான் நடுவுநிலைமை. சமுதாய வரலாற்றை முன்னோக்கி புரட்டிப்பார்த்தால் நடுவுநிலைமையுடன் வாழ்ந்தவர்களே இன்றும் பெருமையாகப் பேசப்படுகின்றனர். நடுவுநிலை நின்று நன்னெறி வழியில் நடந்தமையாலன்றோ அவர்கள் எல்லாம் நம் நெஞ்சத்தின் நடுவிலே கொலுவிருக்கின்றனர்.

பகை,நொதுமல், நட்பு என்னும் மூன்று பகுதியிலும் அறத்தின் வழுவாது ஒருதலைச் சார்பாக நிற்காமல் இருத்தலே நன்மை தரக்கூடிய நடுவுநிலை எனப்படும்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி (குறள் - 118)

நடுவுநிலைமை தவறியவன் கெடுவான் என்பதனை,

கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின் (குறள் - 116)

இக்குறள் கூறுகின்றது.

நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கன்றி நரகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்
நடுவுநின் றார்வழி நானும் நின்றேனே (திருமந் - 307)

என்ற திருமந்திரப்பாடல் நடுவுநிலைமை என்னும் பண்பின் சிறப்புகளை தெளிவுறுத்துகின்றது.

**பிறனில் விழையாமை**

பிறன் மனைவியை விரும்புவாரை அறம், புகழ், கேண்மை, பெருமை இந்நான்கும் எப்போதும் சேராது. பகை, பழி, பாவம், அச்சத்தோடு நாற்பொருளும் வந்துசேரும். பிறன் மனைவியை விரும்பி ஒழுகுவார்க்கு எந்நாளும் துன்பமே.

பிறன் மனையாளை விரும்புவது பேதைமை பிறன்மனை நோக்காமை போராண்மை என்று வள்ளுவர் கூறுகின்றார்.

ஆத்த மனையாள் அகத்தி இருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்கு இடர் உற்றவாறே (திருமந் - 201)

சுவைமிகுந்த பலாப்பழம் இருக்கும்போது அதனைவிடுத்து ஈச்சம்பழத்தை நாடுவதற்கு உவமையாக இப்பாடல் அமைந்துள்ளது. நுகர்வல நுகர்வை நுகர்வதற்கு செயல் ஈச்சம் பழத்தினை உண்ணக் கிட்டாது இடமிருந்து வருந்துதலை ஒக்கும். பிறன்மனைவியைக் காமுறுவதால் எக்காலமும் நீங்கா அச்சமும், பெரும்பழியும், நரகிடை வீழ்தலும், இன்பமின்மையும், துன்பம் நீங்காமையும் ஆகிய துன்பங்கள் வந்தடையும்.

பிறன்மனை விழைவால் ஏற்படும் தீமைகளை ஔவையாரும் விளக்கி நிற்கின்றார்.

நண்டு சிப்பி வேய் கதலி
நாசமுறுங் காலத்தில்
கொண்ட கருவளிக்கும்
கொள்கை போல்
போதம் தனம் கல்வி
போன்றவரும் காலம் அயல்
மாதர்மேல் வைப்பார் மனம் (நல்வழி - 36)

**அழுக்காறின்மை**

அழுக்காறு என்பது பிறர் ஆக்கம், அழகு, புகழ் கண்டு பொறுக்காததைக் குறிக்கும். ஒழுக்கக் கேடுகளுக்கெல்லாம் தலைமையானது அழுக்காறே ஆகும். ஆதனால் அதனை ஒழித்துவாழ அறநூல்கள் அரும்பாடுபட்டுள்ளன.

ஒருவன் தன்நெஞ்சில் பொறாமை இல்லாமல் வாழும் இயல்பைத் தனக்குரிய ஒழுக்கநெறியாகக் கொள்ள வேண்டும். பொறாமை உடையவர்க்கு உலகில் வேறு பகையே வேண்டாம். பொறாமை கூறப்படும் ஒப்பற்ற இப்பாவி ஒருவனுடைய செல்வத்தையும் கெடுத்துத் தீயவழியில் அவனைச் செலுத்திவிடும் என்று குறள் கூறுகின்றது.

அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்
வெவ்வியனாகிப் பிறர் பொருள் வவ்வள்மின்

என்று திருமந்திரம் கூறுகின்றது. முடிவில்லா துன்பம் பொறாமை என்னும் விதையிலிருந்துதான் முனைக்கிறது.அதனை முளையிலே கிள்ளி எறிந்தால் மனதில் தெளிவு எண்ணத்தில் உயர்வு வாழ்வில் புகழ் ஆகியவற்றோடு வாழலாம்.

**இனியவை கூறல்**

முகத்தால் இனிமையாக மற்றவரைப் பார்த்து உள்ளத்தின் ஆழத்திலிருந்து இனிய சொற்களைப் பேசுதல் அறமாகும். எவரிடத்தும் இன்பம் தரும் இனிய சொற்களைப் பேசுபவர்க்குத் துன்பம் தரும் ஏழ்மை வராது.

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின் (குறள் - 96)

என்ற குறள் இன்சொல்லின் மேன்மையை எடுத்தியம்பி உள்ளது முகம் மலர்ந்துஇன்சொல் உடையவனாக இருக்கப்பெற்றால், மனம் மகிழ்ந்து பொருள் கொடுக்கும் ஈகையைவிட நல்லதாகும். இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் ''யாவர்க்குமாம் பிறக்கின்னுரை தானே'' என்ற திருமந்திரம் பாடலடி திகழ்கின்றது.

இன்சொல்லே யாவரும் விரும்பும் சகம் கடின
வன்மொழியினால் இகழும் மண்ணுலகம் (நீதிவெண்பா - 4)
நாவின் நுனியில் நயம்இருக்கிற் பூமாதும்
நாவினிய நல்லோரு நண்ணுவார் - நாவினுனி
ஆங்கு கடினமாகில் அத்திருவுஞ் சேராண்முன்
ஆங்கே வருமரண மாம் (நீதிவெண்பா -7)

என்னும் நீதிவெண்பா பாடல்கள் இன்சொற்களின் இனிமையை எடுத்துரைக்கின்றன.

**ஈகை**

தமிழரது தலையாய நெறி ஈகை பிரதிபலனை எதிர்பாராமல் மழை எப்படி உலகை வாழ்விக்கின்றதோ அதுபோல் கைம்மாறு கருதாமல் பிறர்க்கு கொடுத்து வாழவேண்டும். வறியார்க்கொன்று ஈவதே ஈகை, செல்வத்துப் பயனே ஈதல், ஈதல் அறம் தீவினை விட்டு ஈட்டல் பொருள் என்று இலக்கியங்கள் ஈகையின் சிறப்பினை எடுத்துரைக்கின்றன.

தாயிழந்த பிள்ளை தலையிழந்த பெண்டாட்டி
வாயிழந்த வாழ்வினார் வாணிகம் - போயிழந்தார்
கைத்தூண் பொருளிழந்தார் கண்ணில்லவர்க்கீந்தார்
வைத்து வழங்கி வாழ்வார் (ஏலாதி)

மேலே கூறப்பட்டவர்களுக்கு பொருள் கொடுத்து வாழ்பவர் உலகத்தாரால் போற்றப்பட்டு புகழுடன் வாழ்வர்.

இன்னார் இனியார் என்று பாராமல் கைம்மாறு கருதாமல் உதவிசெய்ய வேண்டும். பொருள் வேண்டி நிற்பவன் முகம்மலரும்வரை, மனம்நிறையும் வரை கொடுக்க வேண்டும்.

வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும். அகவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் சேர்த்துவைக்கும் பாதுகாப்பான இடமாகும்.

வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை என்று வள்ளுவரும். இருவகைப் பற்றற்ற துறவியர்க்கு கொடுப்பதே ஈகைஅறம் என்று திருமூலரும் குறிப்பிட்டுள்ளனர். "ஆர்க்கும் இடுமின் அவர்இவர் என்னன்மின்" என்றும் திருமந்திரம் குறிப்பிடுகின்றது.

**நிறைவாக**

நமது முன்னோர்கள், எழுதி வைத்துவிட்டுச் சென்ற அரிய ஏற்புடைய கருத்துக்களைக் கொண்ட இலக்கியங்கள் மனித வாழ்வை நல்வழிப்படுத்தும் இயல்பினை உடையனவாக அமைந்துள்ளன. இன்றைய சமுதாயச் சூழ்நிலைக்கு அறநூல்கள் குறிப்பிடும் அறச்சிந்தனைகள் அவசியமானவை.

**பயன்பட்ட நூல்கள்**


- ஞா. மாணிக்கவாசகன் திருமூலர் திருமந்திரம், உமா பதிப்பகம், சென்னை.
- யோகி சுத்தானந்த பாரதியார, திருமந்திர விளக்கம், மாணிக்கவாசகர், பதிப்பகம், சென்னை.
- வித்துவான் பாலூர், கண்ணப்ப முதலியார், தமிழ் மந்திரம், வானதி பதிப்பகம், சென்னை.
- தமிழண்ணல், வாழ்க்கைக்கு ஒளிதரும் வள்ளுவம், சிந்தாமணி செல்வ வெளியீடு, மதுரை.
- யோகி ஸ்ரீ சுத்தானந்தபாரதியார், திருக்குறள் இன்பம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- கி. ஆ. பெ. விசுவநாதன், திருக்குறள் புதைபொருள், கம்பன் பதிப்பகம், சென்னை.
- ஔவையார், நல்வழி, நீதிவெண்பா
- முனைப்பாடியார், அறநெறிச்சாரம். விவேக சிந்தாமணி.